**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சோலையார்-காடம்பாறை மின் நிலையம்.**



# 30 இடம் பொருள் கலைஞர்




# சோலையார்-காடம்பாறை மின் நிலையம்

ஆட்சி அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான், அதன் வீச்சும், வேகமும், ஜனநாயகத் தன்மையும் இருக்கும். ஆட்சியில் இருப்பவர்களின் நோக்கம் என்ன என்பதைப் பொறுத்துத்தான், அது யாருக்காக சிந்திக்கும், செயல்படும் என்பதை அறிந்துகொள்ள முடியும். இதற்கு உலக அளவிலான வரலாற்றினை உதாரணமாகக் காட்டுவதைவிட, தமிழ்நாட்டு வரலாற்றில் இருந்தே அறிந்துகொள்ளலாம்.

சுதந்திரத்துக்குப் பின்னர், ஆட்சிப் பொறுப்பேற்ற மாநில அரசுகளில் எத்தனை மாநிலங்கள் முன்னோடியான திட்டங்களைத் தொடங்கியுள்ளன எனத் தேடினால், குறிப்பிடத்தக்கவை எதுவுமில்லை. ஆனால், அந்த வரலாற்றினை தமிழ்நாட்டில் காணலாம்.

## கலைஞரின் பங்களிப்பு

1967-ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொடங்கி வைத்த ஜனநாயகப் புரட்சிதான், இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருந்தது. தமிழ்நாட்டின் இருள் விலகவும் காரணமாக அமைந்தது. உண்மைதான், தமிழ்நாட்டின் இருளை அகற்றும் முயற்சியில், யார் முன்நின்றாலும் அதைத் தனது பணியாக ஏற்றுக் கழகம் தொடர் ஓட்டத்தினைத் தொடங்கி இருக்கிறது. அதன் பெருமைமிகு அடையாளமாகப் பரம்பிக்குளம்- ஆழியார் திட்டத்தில் கலைஞரின் பங்கினைக் காணலாம்.

தமிழ்நாட்டின் மிக முக்கிய சுற்றுலாத்தலமாக வால்பாறையை நாம் அறிவோம். ஆனால், அங்கு கலைஞர் செய்த சாதனை, கழகத்தினரே அறியாத வரலாறு என்று சொல்லலாம். 1967-ஆம் ஆண்டிலேயே 2 கிலோ மீட்டர் நீளத்துக்கு மலையைக் குடைந்து, வாகனம் செல்லும் அளவுக்குக் குகை அமைத்து, அதன்மூலம் நீரை எடுத்துச் சென்று மின் உற்பத்தி செய்ததெல்லாம் அர்ப்பணிப்பான செயல்களாகச் சொல்லலாம்.

## அசாத்தியமான திட்டம்

பரம்பிக்குளம் - ஆழியார் பாசனத் திட்டத்தை 1961-ஆம் ஆண்டில், பெருங்கனவோடு தொடங்கியவர், கர்மவீரர் காமராஜர். ஆனால், திட்டத்தைத் தொடங்கிய பின்னர் அவர் ஆட்சியில் இல்லை. தவிர நிதிப் பற்றாக்குறையும், உணவுப் பஞ்சமும் தலைவிரித்தாடிய தமிழ்நாட்டில், திட்டத்தினை நிறைவேற்ற முடியவில்லை.

> நீர்வளம்-நீர்மேலாண்மை-அதற்கான கட்டமைப்பு உருவாக்கம் குறித்த விழிப்புணர்வை இளைய தலைமுறையினர் பெறும் வகையில், பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டம் தொடங்கப்பட்ட அக் 7-ஆம் தேதி, ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என்றும், பெருந்தலைவர் காமராஜர் உள்ளிட்ட மூத்தோரை நினைவுகூர்வோம் என்றும் அறிவித்திருக்கிறார் நமது முதலமைச்சர்.

கருத்தாக்கம், கற்பனைத் திறன், அணுகுமுறை, திட்டமிடுதல், புத்திசாலித்தனம், இரண்டு மாநிலங்கள் இடையே புரிந்துணர்வு என எல்லாவற்றிலும் அசாத்திய துணிச்சல்கொண்ட, தனித்துவமான திட்டமாக அது இருந்தது. அதன்மூலம் தமிழ்நாட்டின் கோவை, ஈரோடு மாவட்டங்களின் நீர்த் தேவைகள் பூர்த்தியாகும். ஆனைமலைத் தொடரில், 3,800 அடி மற்றும் 1,050 அடி எனப் பலவகையிலான உயரங்களில் இருந்து, மேற்கு நோக்கி செல்லும் ஆறுகளைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பும் திட்டம் இது.

சோலையார், ஆழியார், நீரார் என முக்கிய ஆறுகளைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பும், நீண்ட கால பெரும் திட்டமாக பரம்பிக்குளம் - ஆழியார் திட்டம் இருந்தது. இந்தத் திட்டம் 10 அணைகள், 4 மின் உற்பத்தி நிலையங்கள், 6 முக்கிய சுரங்கப் பாதைகள், 7 நீர்ப்பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றைக் கொண்டது.

## சாத்தியமாக்கிய கலைஞர்

இந்தத் திட்டங்களின்படி, வால்பாறையில் நீரார் அணையைக் கட்டினார் காமராஜர். கழகம் ஆட்சிக்கு வந்தபின்னர்தான், அந்த அணையின் தண்ணீர் தமிழ்நாட்டுக்குச் சொந்தமானது. 1967-இல், பேரறிஞர் அண்ணா, தனக்கு நெருக்கமான தம்பிகளில் ஒருவரான கலைஞரை பொதுப்பணித்துறை அமைச்சராக்குகிறார். எதிர்கால தமிழ்நாடு குறித்த லட்சியவேட்கை கொண்ட கலைஞர்தான் பரம்பிகுளம்-ஆழியார் திட்டத்தினை, ஆமை வேகத்தில் இருந்து அசுர வேகத்தில் செயல்படுத்தினார்.

நீரார் அணையின் மதகுகளைத் திறந்தால், அந்த நீர் கேரளாவின் அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சிக்குச் செல்லும். தமிழ்நாட்டுக்குப் பயன் இல்லை. எனவே அணைக்கு எதிர்புறமாக மலையைக் குடைந்து 2 கிலோ மீட்டர் நீளத்துக்குச் சுரங்கம் அமைத்து நீரை சோலையார் அணைக்குக் கொண்டு வந்தார். 20 அடிக்கு 20 அடி என்ற அளவில், D போன்ற வடிவத்தில் அந்தச் சுரங்கம் அமைக்கப்பட்டது. அந்தச் சுரங்கப்பாதையில் வாகனம் மூலம் சென்று, பராமரிப்புப் பணிகளைச் செய்ய முடியும்.

பேரறிஞர் அண்ணா மறைந்து, கலைஞர் முதலமைச்சராகப் பதவி ஏற்றபின்னர், பொதுப்பணித்துறை அமைச்சராக சாதிக்பாட்சா இந்தத் திட்டத்தினை முன்நின்று கவனித்தார். இந்த மாபெரும் பணிகளில் முதற்கட்டம் நிறைவடைந்து, 1971-ஆம் ஆண்டில் கலைஞர் திறந்து வைத்தார்.

தண்ணீர் மலையை விட்டு வெளியேறும் அதே பாதையில், நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்ட பின்னர், திறந்த வெளிக் கால்வாய்கள் மூலம் சோலையார் அணைக்குச் சேர்கிறது. அந்த மின் உற்பத்தியின் அலகுகள்தான் சோலையார் மின் நிலையம்-1 மற்றும் 2 ஆகிய மின் நிலையங்கள். இதன் மூலம் 70 மெகாவாட் மின் உற்பத்தி தொடங்கப் பட்டது. தொடர்ந்து, காடம்பாறை மின் திட்டத்துக்கான பணிகளையும் செய்தவர் கலைஞர்.

## முன்மாதிரிப் பணிகள்


1971-ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட இந்தத் திட்டம்தான் இந்தியாவுக்கே முன்மாதிரியான நீர் மின் திட்டமாக முதன்முதலில் அமைந்தது. பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியில் பொதுப்பணித்துறை அமைச்சராகத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 1971-ஆம் ஆண்டு முதலமைச்சராகச் சென்று அந்தத் திட்டத்தைத் திறந்து வைத்தவர் கலைஞர். பரம்பிக்குளம் - ஆழியார் திட்டங்களுக்கு 1969 மற்றும் 70-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு-கேரளா இரண்டு மாநிலங்களுக்கு இடையே கையெழுத்தானது.

இந்தப் பாசனத் திட்டங்கள்தான் கோவை, பொள்ளாச்சி பகுதிகளில் இன்றைய வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் காரணமாக இருந்தவை. பெருந்தலைவர் காலத்தில் இந்தத் திட்டத்தை யோசித்தாலும், கலைஞரின் முனைப்பும், உழைப்பும்தான் திட்டத்தைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தது. காமராஜருக்குப் பின் அணைகளே கட்டவில்லை, தி.மு.க. ஆட்சியில் மின் உற்பத்தித் திட்டங்களே உருவாக்கப்படவில்லை எனத் திட்டமிட்டு பொய் பரப்பப்பட்டு வருகிறது. ஆனால், கலைஞர் ஆட்சி காலத்தில்தான் நீர்ப்பாசனமும், மின் திட்டங்களும் அதிகமாகக் கொண்டுவரப்பட்டன என்பதற்கு, அவரின் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களே சான்றாக உள்ளன.

திட்டம் யார் கொண்டுவந்தால் என்ன, அவை தமிழ்நாட்டுக்கு நன்மை தரும் எனில், கலைஞர் எதற்கும் துணிந்தவர் என்பதற்குப் பரம்பிக்குளம் - ஆழியார் திட்டத்தின் பணிகள் என்றென்றைக்கும் சாட்சியாக இருக்கும்.

...வலம் வருவோம்

## வேற்றுமையில் தான் ஒற்றுமை!




பா.ஜ.க. முன்னெடுக்கும் பாசிச அரசியல், அறிவுத் தளத்தில் பல திரிபுகளைச் செய்துகொண்டே இருக்கிறது. ஒரு பக்கம் போலியான வரலாறுகளை எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள், இந்துத்துவவாதிகள். இன்னொருபுறம் என்.சி.இ.ஆர்.டி (NCERT) பாடப்புத்தகங்களில் வரலாறு நீக்கம் நடைபெறுகிறது. இந்திய அளவில் இஸ்லாமிய நகரங்களின் பெயர்மாற்றம் பாரபட்சமின்றித் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இந்துத்துவ நாகரிகம்தான் இந்திய நாகரீகமென வரலாற்றை, இவர்கள் கட்டமைக்கத் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் 'தி இந்தியன்ஸ்: ஹிஸ்டரீஸ் ஆஃப் ஏ சிவிலைசேஷன்' (The Indians: Histories of a Civilization) என்ற நூல் சமீபத்தில் வெளியாகி இருக்கிறது. இந்தியாவின் பன்மைத்துவ வரலாற்றைப் பல்துறை வல்லுநர்களின் கள ஆராய்ச்சிக் கட்டுரைகளின் துணைகொண்டு இந்நூல் நமக்கு வழங்குகிறது. பா.ஜ.க. முன்னெடுக்கும் ஒற்றைத்துவத்துக்கு எதிராக அறிவுத்தளத்தில் மேற்கொள்ளப்படும் மிக முக்கிய நடவடிக்கையாக இதைக் காணலாம். இந்தியா முழுக்க இருக்கும் ஆய்வாளர்கள் இம்முயற்சியை முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்டிருக்கின்றனர். பல்வேறு கலாச்சாரங்களையும் பல்வேறு மொழிகளையும் பல்வேறு நம்பிக்கைகளையும் பின்பற்றும் இந்திய ஒன்றிய மக்களின் வரலாறு, எல்லாத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்துச் செல்ல வேண்டும் என்ற செய்தியைத்தான் இந்நூல் நமக்களிக்கிறது. **'இந்தியா என்பது ஒரு மழைக்காடு'** என்பதை இந்நூல் நிரூபணம் செய்கிறது. ஜி.என்.தெவி, டோனி ஜோசப், ரவி கொரிசெட்டர் என இந்தியாவின் முன்னணி வரலாற்றாசிரியர்கள் இந்நூலைச் செம்மையாகத் தொகுத்துள்ளார்கள்.

**'வேற்றுமையில் ஒற்றுமை'** என்ற காலம் கனிந்திருப்பதை இந்நூலைப் படிப்பதன் மூலம் உணரலாம்.

## :.ப்ளாஷ்பேக்





முருகேசன்

### தொடர் ஓட்டம்!

1993-ஆம் ஆண்டு கழகம் பிளவைச் சந்தித்து நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தது. அப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில், 1993-ஆம் ஆண்டு டிசம்பர் 30-ஆம் தேதி மதியம் கழகப் பொதுக்குழுக் கூட்டமும், அதைத் தொடர்ந்து அன்று இரவே தஞ்சை திலகர் திடலில் மாபெரும் பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. நாங்கள் 16 பேர் இளைஞர் அணி சார்பாக ஆலங்குடியிலிருந்து தஞ்சாவூர் மாநாட்டுப் பந்தல் வரை ஜோதியைச் சுமந்து தொடர் ஓட்டம் மேற்கொண்டோம். கிட்டத்தட்ட 60 கி. மீ தூரத்தை 16 பேரும் தலா 5 கி.மீ என்ற வீதத்தில் ஓடி, இலக்கை அடைந்து தலைவர் கலைஞரிடம் ஜோதியை ஒப்படைத்தோம். இளைஞர் அணியின் இச்செயலைக் குறிப்பிட்டுப் பாராட்டினார். இந்நிகழ்வை இன்றைக்கு நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது.

**-எஸ்.ஆர்.முருகேசன்**
**ஆலங்குடி நகர இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், ஆலங்குடி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018.
வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகம் சமாளிக்கும்!

**1977-ஆம் ஆண்டு, தி.மு.க. தேர்தல் கூட்டணி குறித்துப் பேச்சு எழுந்தது. அப்போது பேசிய கலைஞர், "தோழமைக் கட்சிகளின் தேர்தல் உறவை முறித்துக் கொள்ள, எந்த நேரத்திலும் கழகம் காரணமாக இருந்ததில்லை. தேர்தல் உறவு கொண்ட தோழமைக் கட்சிகளின் வெற்றிக்குக் கழகம் உணர்வுப்பூர்வமாக உழைத்து வந்துள்ளது. அதற்குக் கிடைக்கும் பரிசுகளையும், அது மனம் புண்படாமல் ஏற்றுக்கொண்டு இருந்திருக்கிறது. எந்த நிலைமையையும் கழகம் சமாளிக்கும்" என்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 205




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131